உ
சிவமயம்



அமரர்.

திரு.சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

அவர்களின் நினைவு சுமறும்

# திருதீபம்

30.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சைவ வேளாண் மரபினரும் தண்டிகை முதலி வழித்தோன்றலுமாகிய

# அமரர்.

# திரு.சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

அவர்களை நினைவு கூறும்

# திருதீபம்

# 30.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு



**உதயம்**
**19.07.1947**

**அஸ்தமனம்**
**28.02.2011**

அமரர்

# திரு. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

சீர்சால் விரோதி வர்ஷம் சொன்னமாசி திங்கள்
தேர்ந்த ஏகாதசித் திதி - பேர் பெற்ற
திருநாவுக்கரசு தில்லை கூத்தன்தாள்
பெருமையாய் சேர்ந்த பகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்புருக்கி எமை வளர்த்த அன்புத்
தெய்வத்திற்கு இம்மலர்

# சமர்ப்பணம்

பிஞ்சு வயதில் எமையெல்லாம் அஞ்சாதீர்

என ஆதரித்து அரவணைத்து ஊட்டி

ஆசையுடன் அன்பு காட்டி வளர்த்து நேசமுடன் நேர்வழி

காட்டி ஏணியாய் இருந்து எம்மை வளர்த்து துணையாய்

வழிநடத்திய உன்னத

தெய்வமாம் ஆருயிர்த் தந்தையின் சீரியபாதமலர்களில்

சூட்டுகின்றோம்

**என்றும் அன்புடன்**
**குடும்பத்தினர்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்களின்

# வாழ்வும் வளமும்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு மிக அண்மையிலுள்ள இலங்கையெனும் தீவு அதிமுக்கியத்துவம் வாய்ந்த கேந்திர ஸ்தானமாக விளங்குகின்றது. இதன் வடபால் அமைந்துள்ளது யாழ்ப்பாணக்குடா நாடு. இங்கே வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் கொல்லங்கலட்டி எனும் எழிலுறும் கிராமம் அமைந்துள்ளது. மா, பலா, வாழை எனும் முக்கனி தரும் மரங்களும் வேம்பு முதலிய வான் பயிர்களும், தென்னை, பனை, கமுகு போன்ற தருக்களும் இங்கு நன்கு பலன் தருகின்றன. செல்வத்திற்குத் தெய்வமான இலக்குமி உறையும் வெற்றிலை செய்கை பண்ணப்படுகின்றது. விவசாயம் மட்டுமன்றி கைத்தொழிலும் சிறந்து விளங்குகின்றது. வடக்கே காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையும் வடகிழக்கில் டொலர் அலுமினியம் தொழிற்சாலையும், வாளித்தொழிற்சாலையும், சிறப்புற்று விளங்கின. கொல்லங்கலட்டி சைவவித்தியாலசாலையும், தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரியும் கல்வி வசதியை இடையூறின்றி வழங்கிவந்தன. மக்கள் கமத்தொழில் மட்டுமன்றி அரச உத்தியோகத்தர்களாகவும் அறிஞர்களாகவும், பலநல்லிசைக் கலைஞர்களாகவும் சிறப்புற்றுவிளங்கினர்.

கேணிக்கரை வீரகத்திவிநாயகரும் சரித்திரப்பிரசித்தி பெற்ற நகுலமுனிவரினால் வழிபட்டு கீரிமுகம் மாறியதனால் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும், மாருதப்புர வீரக வல்லியினால் வழிபட்டு குதிரை முகம் மாறப்பட்ட ஞாலம் புகழ் மாவை முருகன் ஆலயமும் அருள் ஒளி வீசுகின்றன. இத்தோடு வடக்கே தென்றலுடன் கூடிய கடல் ஓசை மிளிர்கின்றது. இத்தகைய சீரும் சிறப்புடனும் விளங்கிய மாவை கொல்லங்கலட்டி எனும் கிராமத்தில் சிறப்புடன் வாழ்ந்த சுப்பிரமணியம் தெய்வானைப் பிள்ளை தம்பதிகளுக்கு ஏக புத்திரனாகப் பிறந்து சிறப்புடன் வாழ்ந்து வந்த திருநாவுக்கரசு அவர்களே இவ்வரலாறு கூறும் திருதீபத்தின் பாட்டுடைத் தலைவனாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தந்தையர்களுக்கு நீண்ட காலமாகக் குழந்தைச் செல்வம் இல்லாமல் 19.07.1947 இல் பிறந்த ஏகபுத்திரனாவார். சமயகுரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசு என்னும் பெயரையே பெற்றோர்கள் இட்டார்கள். சிறுபிராயத்தில் கொல்லங்கலட்டி சைவ வித்தியாலயத்திலும், பின்னர் மகாஜனாக் கல்லூரியிலும் கல்வி பயின்று வந்தார். கல்வி பயிலும் பருவத்தில் இவருக்கு 13 வயதாக இருக்கும் போது தந்தையார் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். தாயார் தனது மகனை தனது அரவணைப்பிலேயே வளர்த்து வந்தார். கல்விபயின்று கல்லூரியை விட்டதும் 1969 இல் கொழும்பு சென்று தந்தை வழி உறவினராகிய கஸ்தூரி அக்காவுடனும் அத்தானுடனும் இருந்து அவர்களது வியாபாரத்தில் (R.K.Jrading company) யில் ஈடுபட்டு வந்தார். எண் சோதிடத்தில் தேர்ச்சியும் நம்பிக்கையும் இவருக்குண்டு

83ம் ஆண்டு கலவரத்தினால் தொழில் பாதிப்படைந்தது. 1985ம் ஆண்டு மூளாயைச் சேர்ந்த நடராஜா யோகேஸ்வரி தம்பதிகளின் ஏக புத்திரியை மணம் முடித்துக் கொண்டார். இல்லறவாழ்க்கையின் நற்பயனாக வானதி, அபிவர்ஷனி, ஆர்த்திகா என்ற மும்முத்துக்களைப் பெற்று இனிதே இல்லற வாழ்க்கையை நடாத்தி வந்தார். 83ம் ஆண்டில் பாதிப்படைந்த தொழிலை பின்னர் மீண்டும் இணுவிலில் தேங்காயெண்ணை உற்பத்தி ஆலை ஒன்றை நிறுவி நடாத்தி வந்தார். நாட்டுக்கலவரத்தில் திரும்பவும் தொழில் ஸ்தம்பிதமாகி நஸ்டமடைந்தார். பின்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறிமூலம் தேங்காயெண்ணை அனுப்பி வியாபாரம் மேற்கொண்டார். கஸ்டகாலம் விடவில்லை. 90ம் ஆண்டு கலவரத்தினால் வியாபாரம் முழுதாக நலிவுற்றதனால் மிகவும் மனமுடைந்த நிலையில் இடைநிறுத்தம் செய்து கொண்டார். 1993ம் ஆண்டு பின்னர் சிலாபத்திற்குச் சென்று நண்பர் ஒருவருடன் தேங்காயெண்ணெய் உற்பத்தி ஆலையில் முக்கியஸ்தராக கடமை புரிந்து தனது திறமையினாலும், விடாமுயற்சியினாலும் தானே மைக்குளம் சிலோ ஒயில்மில் என்ற பெயரையுடைய தேங்காய் நெய் உற்பத்தி ஆலையை உருவாக்கி உரிமையாளராக நடாத்தி வந்து கொண்டிருந்தார். கொப்பராவைத்தெரிவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்த முறையில் தரப்படுத்தி எண்ணெய் உற்பத்தி செய்யும் திறமை இவருக்கு இருந்தபடியினால் நாட்டில் CHILAW OIL mill என்றால் தரமான தேங்காயெண்ணெயும் பிண்ணாக்கும் என்பது யாவர்க்கும் தெரிந்து விரும்பி வாங்கிக் கொள்வார்கள். நாட்டுக்கலவரத்தினால் தொழில் பாதிப்படைந்தமையை யோசித்துக் கவலையுற்று நோயாளியாகிவிட்டார். பிள்ளைகளைச் சிலாபத்தில் படிக்க வைத்து மேற்படிப்பிற்காக கொழும்பில் படிக்க சகல வசதிகளையும் அமைத்துக் கொடுத்தார். அவர்களும் நன்றாகப் படித்து மூத்தமகள் ஹற்றன் நஷனல் வங்கியில் வேலையான சந்தோஷத்தையும் பார்த்து மகிழ்ந்தார். மற்ற இருவரும் படித்துக் கொண்டிருக் கின்றார்கள். சாதரணமாக நோய்வாய்ப் பட்டிருக்கும் போதே தனது தொழிலின் உற்பத்தியை உயர்த்த வேண்டும் என்ற பேரவா இருந்தது. நோய் கொஞ்சம் கூடிய காலகட்டத்தில் கூட தனது தொழில் பாதிப்படையாவண்ணம் வீட்டில் இருந்தபடியே தொலைபேசி மூலம் நடாத்தி வந்தார். தனது தொழிற்சாலையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தர், ஊழியர்கள் அனைவரையும் ஏற்ற ஊதியம் கொடுத்து அன்போடு நடாத்தி வந்தார். இவரது மரணச்சடங்கின் போது இவர்கள் அனைவரும் வந்து அஞ்சலி செலுத்தி மிகவும் கவலைப்பட்டதை எம்மால் நேரில் காணக்கூடியதாக இருந்தது.

ஏழைகட்கு உதவுதல், விருந்தோம்பல், உற்றார், உறவினரை அன்புடன் நேசித்து கோவில்களுக்கு அறப்பணி செய்தல், நேர்மை எனும் உயர்ந்த பண்பு இவரிடம் காணக்கூடிய விசேஷ அம்சங்களாகும். தனது மனைவி மக்களுக்கும் தான் இருந்த காலத்தில் சகல வசதிகளையும் அமைத்துக் கொடுத்து வாழ வைத்துச் சென்று விட்ட மாமனிதர் நோயினால் அடைந்த துன்பங்கள் ஏராளம் அந்த நேரத்திலும் மிகவும் தன்னம்பிக்கையுடன் எதனையும் எதிர்த்து போராடிய மனத்தைரியம் இருந்தது.

தன்னை உருக்கி ஒளி கொடுக்கிற மெழுகுதிரி போலவும், தன்னை அரைத்து நானிலமெங்கும் மணம் கமிழ்கின்ற சந்தனத்தைப் போலவும், தனது வாழ்நாளில் தாளாத நோய்க்காலகட்டத்திலும் உடம்பை வருத்தித் தொழிலின் உயர்ச்சிக்காகவும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினரின் மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டமை தனது உயிரையே தியாகம் செய்து தன்னை மறக்கமுடியாத நினைவுச் சின்னமாக விட்டுச் சென்ற தென்றே கூறலாம். அலைபரப்பி ஒலி எழுப்பும் சத்தமிடும் கடல், அகல பரந்து விரிந்திருக்கும் ஆகாயம், நெடிதுயர்ந்து நிற்கும் இமயம் அகிலமெங்கும் ஒளிபரப்பும் கதிரும், தண்மதியும், இயற்கையான இவைகள் இருக்கும் வரையும். இவரது இரக்க சுபாவம், மக்கள் துயர் தீர்த்தல் மக்களுடன் பழகிய அன்பு பண்பு, உற்றநேரத்தில் உதவுதல். உயர்ந்த பண்பான உண்மையும் நேர்மையும் கடைப்பிடித்தல் போன்று ஆற்றிய செயல்கள் எல்லோர் மனதிலும் இருந்தே தீரும் புகழும் வாழ்ந்தே தீரும் பிறப்பும் இறப்பும் பிறப்பிலன்றே எழுதப்பட்டது. ஆகவே மனதராகப் பிறந்தவர்கள் எப்பவோ ஒரு நாள் இறைவனை அடைய வேண்டியது தான். இதனையே அமர்த்துவம் அடைந்த நாவுக்கரசு அவர்களும் தனது மனைவி மக்கள் அருகில் நிற்க 28.02.2011 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

நிறைக அவர் ஆன்ம சாந்தி

ஓம் சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
Sri Nagulambika Sametha Sri Naguleswara Swamy Temple



Rajarajasri K. Naguleswara Kurukkal
Governing Authority & Chief Priest
Naguleswaram, Keerimalai,
Kankesanthurai, Sri Lanka.

"நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாதரா"
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா


ஆத்ம சாந்தி

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் தொழில் நிமித்தம் பல இடங்களுக்கு சென்று அந்திய காலத்தில் சிலாபத்தில் கொப்பரா தொழிற்சாலை நடத்தி வந்த சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்கள் இறைவனடி அடைந்த துக்ககரமான செய்தி கேட்டு துயரமடைந்தோம்.

அன்னார் எனக்கு சிறுவயதில் இருந்தே என்னுடன் பழகி வந்தவர். தெய்வபக்தி உள்ளவர். நகுலேஸ்வர ஆலயத்தில் நகுலேஸ்வர பெருமானுடன் அபார நம்பிக்கை கொண்டு இருந்தவர். குரு விஸ்வவாசம்,கடமை,கன்னியம், கட்டுப்பாடு ஆகியவற்றை தவறாது கொள்கை உடையவர். பிறப்பில் ஒன்றே இறப்பும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே அன்னாரின் மறைவால் துயரம் அடைந்திருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார்,உறவினர்,சுற்றத்தார் அனைவரையும் துக்கம் நீக்கி அன்னாரின் ஆத்மா நகுலேஸ்வர பெருமானின் பாதங்களில் அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

நகுலேஸ்வரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## இரத்தின விநாயகர் துதி

நாதமாய்ச் சுருதியாகி நவிற்றிடும் சுரங்கள் ஏழாய்க்
கீதமாய் இருதிணைக்கும் கிளைக்கும் ஓரின்பம் நல்கி
பேதமாய் விரிந்து வந்து பிறப்பிடம் சேரும் சாம
வேதமாய் வரும் இரத்தின விநாயகன் மலர்ந்தாள் போற்றி

## தேவாரம்

கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய்
காலனையும் காலாற் கடிந்தான் கண்டாய்
புள்ளியுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்
வெள்ளி மிளிர் பிறை முடிமேற் கூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நம் செந்தில் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக் காட்டுறையும் மணாளன் தானே

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றேயனையாய் என்னையாட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோரிடையூறெனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே!

## திருவிசைப்பா

மங்கையோடிருந்தே யோகுசெய் வானை
வளரிளந் திங்களை முடிமேல்
கங்கையோடணியும் கடவுளைக்கங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சோளேச்சரத் தானை
அங்கேயே டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்த சொல் மாலையால் ஆடிச்
செங்கையோ டுலகில் அரசு வீற்றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே.

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடியீ
சற்காட் செய்ம்மின்,குழாம்புகுந்து
அண்டம் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்றும் காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்

## திருப்புகழ்

அகரமாகி அதிபனுமாகி அதிகமுமாகி – அகமாகி
அயனென வாகி அரியென வாகி – அரனென வாகி
இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி – வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ எனது முன் ஓடி வரவேண்டும்
மகபதியாகி மருவுவ லாரி மகிழ்களி கூரும் – வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ்கதிர்காமம் –
உடையோனே
செகண சேகு தகுதிமி தோதி திமியென ஆடும் – மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமானே
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புக்குரியவர்

எனது வாழ்நாளில் நான் சந்தித்த கலங்கவைத்த ஒரு நாள் பெப்ரவரி 28ம் திகதியாகும். எனது அன்பிற்குரியகணவர் நோய்காரணமாக வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குச் சென்று வருவது வழக்கம். அன்றைய தினமும் ஏலாமல் இருந்ததில் அப்பலோ மருத்துவசிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர்கள் தங்களால் இயன்ற சிகிச்சையளித்தும் பயனளிக்காமல் நானும் பிள்ளைகளும் அருகே நிற்க இமைமூடி முழிப்பதற்குள் எங்களைவிட்டுப்பிரிந்துவிட்டார். என்னை மணமுடித்த நாளிலிருந்து இறுதிவரை எவ்வளவு கஸ்டங்கள்,நோய்கள் ஏற்பட்டு இருந்தாலும் என்னையும் பிள்ளைகளையும் எந்தவித குறையுமின்றிக் கஸ்டப்படாமல் வேண்டியயாவற்றையும் திருப்தியாக அமைத்துக் கொடுத்து வாழவைத்தார். குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட சகல இன்ப துன்பங்களையும் பகிர்ந்து,துன்பம் வரும்போது சலியாது நிமிர்ந்து நின்று தனது கடமையைச் சரி வரச் செய்துள்ளார். என்னுடன் நீண்ட நாட்கள் வாழவைக்காமல் காலன் பறித்துவிட்டான். நீங்கள் எனக்கு நம்பிக்கையும் மனத்தைரியமும் பலமும் ஊட்டி வாழ வழிகாட்டிவிட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.

**இல்லத்தரசி**

விதியென்னும் குழந்தை கையில் உலகம் தன்னை
விளையாடக் கொடுத்துவிட்டாள் இயற்கை அன்னை
அது விட்டெறியும்,உருட்டிவிடும்,மனிதர் வாழ்வை
மேல் கீழாய் புகட்டிவிடும் வியந்திடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பாவிற்கு

எங்களை பல கனவுகளோடு பெற்றவரே! எந்த சந்தர்ப்பங்களிலும் எம் தேவையை பூர்த்தி செய்து,கண்டிக்க வேண்டிய நேரங்களை தவிர மற்று அனைத்து நேரங்களிலும் உங்கள் அன்பையும் கனிவையும் காட்டி வளர்த்தீர்கள். உங்களுக்கு ஏதேனும் பிரச்சனைகள் இருந்தாலும் அதை நீங்களாகவே தீர்த்து,எங்களுக்கும் புத்திமதி கூறி எம்மை தைரியசாலிகளாக வளர்த்துள்ளீர்கள்.

எமக்கு நல்ல கல்வியையும் வாழ்வையும் தந்து எங்களை ஓர் நல்ல நிலைக்கு வழிகாட்டியுள்ளீர்கள். எங்களுக்கு எப்பொழுதும் உங்களைப் போல் நல்ல மனத்திடத்தை தந்து, எங்களுடன் எப்பொழுதுமிருந்து நல்லாசி தருவீர்கள் என நாம் நம்புகின்றோம்.

உங்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக உங்கள் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றுவோமென நம்புகின்றோம்.

**உங்கள் அன்புக்குரிய பிள்ளைகள்**
**வானிதி, அபிவர்ஷனி, ஆர்த்திகா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத்தம்பி திருநாவுக்கரசு

திருநாவுக்கரசுவை தம்பி என்று கூறுவதைவிட மகன் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன். அவனுக்கு திருமணம் ஆகும்வரை 15 வருடகாலங்களாக என்னுடைய ஒருமகன் போல் இருந்து எனது கணவருடன் வியாபாரத்தில் ஈடுபட்டு எங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே திகழ்ந்தான். என்னை அன்புடன் கஸ்தூரி அக்கா என்றும் அவரை அத்தான் என்றும் அழைத்த ஒரு நல்ல பிள்ளையாகவே நடந்து கொண்டான். அவனைப்பற்றி எக்குறையும் கூறமுடியாது. எவரையேனும் நோகடித்து அவன் வாழ்ந்தது இல்லை. சொந்தங்கள் வியாபார நண்பர்கள் எல்லோருடனும் மிகவும் அன்பாக பழகுவான் மிகவும் நேர்மையான ஒருவன்.

அவனுக்கு திருமணமாகி மனைவி பிள்ளைகளுடன் அன்பான குடும்பவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் விதி தன் விளையாட்டை ஆரம்பித்து அவன் வாழ்க்கையில் அவனுக்கு வந்த நீரிழிவு நோயினால் அவன் அடைந்த துன்பங்களே ஏராளம். எனினும் மிகவும் தன்னம்பிக்கையுடன் எக்கஷ்டமும் வந்தபோதிலும் எதிர்த்து போராடினான். அவனது மனத்தைரியம் எல்லோரையும் வியர்க்க வைத்தது.

அவன் சிலாபத்தில் வசித்த பொழுதும் கொழும்பு வரும் வேளைகளில் எனது வீட்டிற்கு வராமல் செல்லமாட்டான். எப்பொழுதும் என்னுடன் மிகவும் அன்பாகவே இருந்தான். இறுதியாக அவனது வாழ்க்கை எங்களது இல்லத்திற்கு அருகில் அமைந்தது எனக்கு மீண்டும் சந்தோஷத்தை அளித்தது. ஆனால் அந்த மகிழ்ச்சியை நீண்ட நாட்கள் நீடிக்க இறைவன் அருளவில்லை. அவனது இத் திடீர் மரணம் இவ்வேளையில் எதிர்பார்க்காத ஒன்று. எனினும் எனது மகன் Dr.செந்தில் அவன் இறுதிக்காலங்களில் நோயுடன் போராடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட வேளைகளில் எல்லாம் சென்று அவனுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்கி அவனைப் பார்த்துக் கொண்டது. எனக்கு ஒரு புறம் மன நிறைவைத்தந்தாலும் அவனது இழப்பு மிகவும் வேதனையை அளிக்கின்றது.

**திருநாவுக்கரசு ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல**
**இறைவனை வேண்டி நிற்கின்றேன்.**

அன்புள்ள அக்கா,
**கஸ்தூரி இராமநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr.C.Padmanathan

"Aruna"
15A, Manor road, Chigwell, Essex IG7 5 PF, U.K

Date : 06.03.2011
Dear Vignes,Vanathi, Abi and Arthi,

Iam write this letter to express our deepest sorrow and sympathies to all of during this period of despair,we understand the anuish and trauma you had experienced after Thiru aththan's untimely death. No words can console you during this period.

I have knownThiru over 50 years and my memories go back to kolankallady where I vividly remember his father and mother. we are glad and extremely privileged to have been associated with Thiru over the years in jaffna and in colombo where he worked with my late elder brother Ramanathan. The ties have lasted with kasthuri Anni and now, my nephew Senthil.

Thiru was a kind hearted man always willing to help anybody with out expecting anything in return. Unforunately he was plagued with an illness which he had no control over and ultimately resulting in god taking him away from this earth,It was by chance that we were able to visit him and talk to him the week before he passed away,in a way gave us great satisfaction and happiness.

No words can express our deepest feelings for him and his soul may soul rest in pease. our thoughts and prayers are with you all

Affectionately yours,
Athan,Acca,Arun



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை விட்டகலாத உத்தமர்

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த கொல்லங்கலட்டியில் சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியருக்கு ஏக புத்திரனாக அமரர் திருநாவுக்கரசு 1947ம் ஆண்டு பிறந்தார். தான் பிறந்த ஊரிலே கல்வி கற்று சமய ஒழுக்கமும் தமிழ் பண்பாடோடும் வாழந்தவர். நாட்டின் சூழ்நிலை காரணமாக 90ம் ஆண்டு வலிவடக்கு மக்கள் பாரிய இடப்பெயர்வினை மேற்கொண்டு உள்ளூரிலே புலம் பெயர்ந்து வாழும் துப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர். எனினும் விடா முயற்சியும் ஊக்கமும் உடைய அமரர் திருநாவுக்கரசு 1993ம் ஆண்டு சிலாபத்திலே எண்ணெய்மில் ஒன்றினை ஆரம்பித்து தனது தொழிலை பெருக்க முற்பட்டார். தொழிலில் கண்ணும் கருத்துமாக இயங்கி வந்த அவர் பிறருக்கு உதவிக்கரம் நீட்டும் பண்பும் கொண்டவர். இத்தகைய பண்பாளன் எனக்கு 1993ம் ஆண்டு அறிமுகமானார்.

"பிறப்பால் தொடரும் உறவுகளே
உன்னதமானவை"

என்ற இந்துமத தத்துவத்திற்கு இணங்க அன்று தொட்டு இன்று வரையும் அன்னாரின் குடும்பமும் எனது குடும்பமும் இணைந்து செயல்படுகின்றமை அவரது நல்ல நட்பிற்கு சான்றாகும். எனக்கு பிரச்சனைகள் வரும் சந்தர்ப்பங்களில் தானாக முன்வந்து உதவிகள் பல செய்துள்ளார். எனது ஊரான சாவகச்சேரி முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிக்கு மனமுவந்து தனது பங்களிப்பினை வழங்கி திருப்பணித் தொண்டு சிறப்பாக நடைபெறவும் உதவினார். அவரது அயராத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் இன்று பெருவளர்ச்சி அடைந்ததோடு அவரும் ஒரு பிரபல்ய வர்த்தகராகவும் விளங்கினார். இத்தகைய பண்புகளைக் கொண்ட அன்னாரின் நட்பினை இழந்து நிற்பது சொல்லொணாச் சோகம் சுமந்த போதிலும் இது மாற்றொணா விதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கணவனை பிரிந்து தவிக்கும் மனைவி
தந்தையை பிரிந்து தவிக்கும் பிள்ளைகள்
உறவை பிரிந்து தவிக்கும் உறவினர்கள்
நட்பை பிரிந்து தவிக்கும் நண்பர்கள்"

பிறந்தவர் என்றோ ஒருநாள்,இறப்பர்
என்பது திண்ணம் எனினும் அன்னாரின்
மறைவு அவரது குடும்பத்தாருக்கும்
அவருடன் தொடர்பு கொண்ட
சமூகத்தாருக்கும் பேரிழப்பாகும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்டும்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய அன்னார் இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் உடல்தான் நம்மை விட்டுப் பிரிந்ததுவே! தவிர அவரின் நினைவுகள் நீங்குவதில்லை. வாழ வைத்த இறைவன் வாழ்வின் கடமை முடிய அழைத்து விட்டான். வருந்தாதீர்கள். அவர் தம் நற் செயலைப் பின்பற்றுங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**இல, 24**
**உருத்திராமாவத்தை,**
**வெள்ளவத்தை.**

**வை. சிவராஜா**
**சிவாறேடிங் கொம்பனி**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவும் நானும்

வ.பாலச்சந்திரன்
(Rajan)

எங்கள் எல்லோராலும் திரு திரு என்று அன்புடன் அழைக்கப்படும் திருநாவுக்கரசு அவர்கள் எம்மை விட்டு மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டார். அவரின் பிரிவு எனது நெஞ்சத்தில் சோகத்தினை விதைத்துச் சென்றமையை இன்னமும் உணரக்கூடியதாக உள்ளது. அவரும் நானும் பாடசாலைக்காலத்திலிருந்து வாழ்ந்த அனுபவத்தினை நினைக்கும் பொழுது நெஞ்சம் நெகிழ்கின்றது. எனது திருவின் நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் சற்றேனும் ஆறுதல்பெற முயல்கின்றேன்.

திரு எனது நெருங்கிய உறவினர்,அயலவர்,அதனால் சிறுவயது முதல் அவருடன் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் மகாஜனக் கல்லூரிக்குச் செல்லத் தொடங்கும் போது அவர் அங்கு மேல்வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அதனால் எனது தாயாரின் விருப்பப்படி என்னைத் தினமும் பாடசாலைக்குத் தனது சைக்கிளில் ஏற்றிச் செல்வார். விடுமுறை நாட்களில் வெளியிடங்களுக்குச் செல்லும்போதும் அல்லது அவரது தோட்டத்துக்குச் செல்லும் போதும் நான் அவருடன் செல்வேன். அவர் உண்மையான நட்புடன் இனிமையாகப் பழகுவார்.

பாடசாலை வாழ்க்கை முடிந்தவுடன் அவர் கொழும்பு வந்து, திரு.இராமநாதன் அண்ணர் கஸ்தூரி அண்ணி குடும்பத்துடன் தங்கியிருந்து RK Trading Company யில் வேலை செய்தார். நானும் 1978 ஆம் ஆண்டு கொழும்பு வந்து இவர்களுடன் தங்கியிருந்து வேலை செய்தேன். அதனால் நானும் திருவும் ஓர் அறையில் பல வருடங்கள் ஒன்றாகத் தங்கியிருந்தோம். அப்போது அவர் Honda CD 200 Motor Bike வைத்திருந்தார். தனது வேலை நிமித்தம் அவர் இலங்கையின் பல பாகங்களுக்கும் செல்வார். குறிப்பாக மாதம்பை,சிலாபம், குழியாப்பிட்டி,நாத்தாண்டியா,குருநாகல் போன்ற இடங்களுக்கு மாதம் ஒருமுறை சென்றுவருவார். அப்போது என்னையும் தனது Motor Bike இல் ஏற்றிச் செல்வார். இவ்வாறு பல இடங்களுக்கும் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கடவுள் பத்திமிக்கவர். காலையில் வேலைக்குச் செல்ல முன் வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்றுவிட்டுத்தான் செல்வார். பண்டாரநாயக்கா மாவத்தையில் உள்ள முருகன் கோயிலும் அவர் தவறாது வழிபாடு செய்வார். கந்தசஷ்டி விரதம் மிகவும் கடுமையாகப் பல வருடங்கள் அனுஷ்டித்தார். சோதிடத்தில் குறிப்பாக எண் சோதிடத்தில் நம்பிக்கை நிரம்பப்பெற்றவர். கடும் நேர்மையான அவரை வியபாரத்தில் பல தாழ்வுகளைச் சந்திக்கவைத்தது. எதற்கும் கவலைப்படாமல் தன்நம்பிக்கையுடன் செயற்பட்டு மீண்டும் நல்ல நிலைக்கு வந்தார். எனக்குத் தெரிந்து அவர் அவரது வியாபார நண்பர்களிடம் வங்கி அதிகாரிகளிடம் அன்று முதல் கடைசி வரைக்கும் பெற்ற நற்பெயர் திரு நேர்மை தவறாதவர் என்பதாகும்.

அவர் ஒரு வீட்டிற்குச் சென்றாலும் பல பொருட்களுடன் செல்வதும் நாம் அவரது வீட்டுக்குச் செல்லும் போது அமோகமாக உபசரிப்பதும் அவரது வழமை கடைசியாக அவர் Lanka Hospital இல் இருந்தபோதும் நானும் மனைவியும் அவரைப் பார்க்கச் சென்றபோது அதே உபசரிக்கும் பண்பினைக் காணக்கூடியதாக இருந்தது. இது ஒன்றே போதும் அவரது உபசரிப்புப் பண்பிற்கு

திருமற்றவர்களுக்கு உதவி செய்வதில் முன்நிற்பவர். 1987இல் வீடு வாங்குவதற்கு முன்னின்று ஊக்குவித்தார். அத்துடன் வீட்டுக்குச் சாந்தி பூஜை செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். நான் பழைய வீட்டுக்குத் தேவையா? எனத் தெரிவித்தபோதும் இல்லை பழைய வீடு என்றாலும் சாந்தி செய்ய வேண்டும் நீர் ஒன்றும் செய்யத் தேவையில்லை அது நான் எல்லாம் செய்வேன் என,உரிமையுடன் தெரிவித்துத் தானே ஐயர் பூஜைப்பொருட்கள் அனைத்தும் ஒழுங்கு செய்து, அன்று இரவு மிக நேர்த்தியாக அந்தப் பூஜையினை மனதுக்கு நிறைவாக நடாத்தி வைத்தார். மனம்போல் வாழ்வு என்பதை திரு அவர்கள் எனது வாழ்விலும் நிரூபித்துவிட்டார்.

சிறுவயது முதல் எனது வாழ்க்கையில் நெருக்கமாகப் பழகியவர்களில் திருவும் ஒருவர். உற்ற நண்பரை இழந்த துயரில்,நினைவுகளில் வாழ்ந்தவாறே அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ඔබ අප අතරින් සමුගත සිය අප හදවතුල සදා අමරණීයයි"

ඔබ ආයතනයේ සේවය කළ අප සැමට කිසිමදාක නැත සේවකයෙකු ලෙස සැළකුවේ. හොඳ මනුෂ්‍ය ගතිගුණ වලින් පිරි හදක් ඇති ස්වාමියෙනි ඔබ අප සැමහට. ඔබ අප අතරින් වියෝවීම අප සියලුදෙනා හට දරාගත නොහැකිය. ඔබට සැමදා නිවන් සුව පතමු.

විසි වසක් අපහට ඔබ කළ සේවේ
වැගිරෙන කඳුළු අතරින් නිබඳව සිහිවේ
උස් මිටි භේද නැත කිසිවිට සැළකුවේ
ඇයි ඔබ ඒ හසරැළි අද සැඟවුවේ.........

මෙයට,

ශෝකයට පත්

[illegible]XXXXXXXX

සැමදා අවංක, විශ්වාසනීය සේවක පිරිස.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத மைத்துனர்

எங்கள் மைத்துனர் அமரர் சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியினை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். எங்களின் அக்கா மைத்துனி விக்கினேஸ்வரியின் அன்பு கணவராக இணைந்த காலம் தொடக்கம் எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாக இருந்து எமக்கெல்லாம் நல்ல வாழ்க்கைத்துணையமைத்து வைத்து நாங்கள் வெளிநாட்டில் நாம் வாழ்ந்து வருகின்ற வேளையில் அத்தான் நோய்வாய்ப்பட்டு தனது அன்பு மனைவி விக்னேஸ்வரி,பிள்ளைகள் வானதி, அபிவர்ஷினி,ஆர்த்திகா, ஆறாத்தயரில் ஆழ்த்தி விட்டு இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் இழப்பு அக்காவின் குடும்பத்திற்கும் மட்டுமல்லாமல் எங்கள் குடும்பத்திற்கும் பேர் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் பெருமானை பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**மைத்துனர்மார்,**
**யோகன், மோகன், மதன்,**
**சகோதரிமார்**
**ஜீவினி, பவானி, கமலா,**
**மருமக்கள்**
**அபிலாசா, பிரணவன், சுருதி,**
**பிரவீன், அஸ்வினி,**
**வைதிகா, நவீன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமுத்திரத்தின் முத்து எனத் திகழும் இலங்கை தீவின் நான்கு திசைகளிலும் வளம் பெறும் ஈச்சரங்கள் விளங்கும் ஈழத்திருநாட்டின் சிகரமாக விளங்கும் யாழ்குடாவில் உள்ள கொல்லங்கலட்டியில் சுப்பிரமணியம் தம்பதியினருக்கு மகனாக பிறந்து இன்று அமரத்துவம் அடைந்திருக்கும் எங்கள் சகோதரனின் ஆத்மா சாந்தியடைய எங்கள் குடும்பம் சார்பாக பிரார்த்திப்போமாக

(தி)ருவிளையாடல் இது தான் திரு வினுடைய விளையாடல்

த(ரு)வாக நின்று தனியாக வளர்ந்து

(நா)வுக்கு அரசன் எந்நாளில் நினைப்போம்?

ப(வு)னுக்கு கரட் என்பர் எம்பாலகனை அளவிடலாமே!

ப(க்)குவமும்,பாசமும்,பண்புகளும் நிறைந்திருந்த முகமதனை காண்கின்றோம்

(க) மலம் போல் பூத்திருந்து கலங்காது வாழ்ந்து வந்தீர்

ப(ர)ந்தாமன் உமை அழைத்து ஏனோ பக்குவமாய் தன்னிடத்தே சேர்ந்திடனே

(சு)வையாக களைந்து,சுளையாக எடுத்து சுவைப்பதிலே

சுகம் கொண்ட தாங்கள் (எமை) இன்று போல்

என்றும் சுமந்திடுவீர்



**வை.சிவபாலன் குடும்பம்**
**வை.தர்மபாலச்சந்திரன்குடும்பம்**
**வை.ஜெயபாலன் குடும்பம்**
**வை.ரஞ்சினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா

பள்ளிப்பருவத்தை மட்டும் கடந்து நடைமுறை வாழ்விற்கு அடியெடுத்து வைத்த எனக்கு நல்ல குருவாக இருந்து சிறந்த வழிகாட்டினீர்கள். உங்களை பார்த்து நான் கற்றுக்கொண்டவை அதிகம் எந்த பிரச்சனையிலும் துணிவுடன் செயலாற்றி எதிர் கொண்டு வெற்றிக்கான நீங்கள் வழிகாட்டினீர்கள். இன்று நானும் என் குடும்பமும் சமூகத்தில் நல்வாழ்வு வாழ என் தந்தை காலத்திலிருந்தே எங்கள் குடும்பத்திற்கு ஒளிவிளக்காய் இருந்தீர்கள். இங்கு பல குடும்பங்கள் உங்கள் பிரகாசத்தில் வாழ்கின்றன. எனக்கு தெய்வமாக வழிகாட்டிய நீங்கள் இன்று இறைவனோடு இரண்டற கலந்துவிட்டீர்கள். எம்மை விட்டு உங்கள் உயிர் பிரிந்தாலும் என்றும் எம் நினைவுகளில் நீங்காது இருப்பீர்கள். நீங்கள் சொல்லித் தந்தவை என் காதுகளில் என்றும் கேட்டுக் கொண்டே இருக்கும் இறைவனோடு சேர்ந்து உங்கள் ஆத்ம சாந்திக்கு பிராத்திக்கின்றேன்.

அன்பின் அகமாக
ஆதரவின் ஆலயமாக
பண்பில் பரமனாக
துணிவின் தூணாக
நம்பிக்கையின் நட்சத்திரமாக
இருந்த நீங்கள்
ஏகாதசியில் இயற்கை எய்து
மகாவிஷ்ணுவோடு இரண்டறக்கலந்துவிட்டீர்கள்
உங்கள் ஆத்மா உடலை விட்டு நீங்கினாலும்
எம் உள்ளங்களை விட்டு நீங்காது
என்றும் உங்கள் பிரிவு எம்மை வாட்டும்

**சிற்சபேசன் விஸ்வகுமாரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி மறப்பேன் தம்பி உங்களை!

ஒரு மனிதர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் அவரைப்பற்றி நிலவுகின்ற கருத்துக்களைவிட அவர் மறைந்த பின்னர் நிகழ்வுறும் விமர்சனங்களே அவரின் உண்மையான தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. இந்த வகையில் எனது தாயாரின் அன்புச்சகோதரியின் மகன் என் உடன் பிறவாத தம்பி அமரத்துவம் அடைந்த திருநாவுக்கரசு அவர்கள் எங்கள் குடும்பத்தில் எல்லோரிலும் மிகுந்த பற்றும் பாசமும் உள்ளவர். எவ்வளவோ உதவிகள் செய்துள்ளார். தான் நோய்வாய்ப்பட்டிருக்கும் பொழுதுகூட எனது கால் நடக்க முடியாத தம்பி குஞ்சுவை உயிருடன் இருக்கும் போது பார்க்க வேண்டும் இறந்த பின்னர் பார்ப்பதில் அர்த்தமில்லை என்று கூறுவார். வருடம், தீபாவளி, தைப்பொங்கல் முதல் நாளே தொலை பேசியெடுத்து எப்படியிருக்கிறாய் பிள்ளை என்று கேட்பார். இனி இப்படிக் கேட்க யாரும் இல்லை. எங்கள் குடும்பத்தில் இன்பதுன்பங்களை விசாரித்து கஸ்டங்களை எதிர்நோக்கும் வேளையில் பல வகைகளிலும் ஆவன செய்துள்ளார்.

வீட்டிற்கு வந்தோர்க்கு விருந்தோம்புதல் ஏழைகட்கு உதவுதல் அவர் மனம் விரும்பிச்செய்யும் செயல்களாகும். நேர்மைக்கும், உண்மைக்கும் உறைவிடமானவர். தம்பி சிலாபத்தில் இருக்க நாங்கள் வவுனியாவில் இருந்தபடியால் நாட்டுப் பிரச்சனையிலும் அடிக்கடி அவரைப்பார்க்க முடிந்தது. இறுதியில் மேலும் சிகிச்சை பெற இருப்பதனால் இன்னமும் நீடிய காலம் வாழுவார் என இருந்தோம். விதிவிடவில்லை. காலன் பறித்துவிட்டான். தம்பி உனது உயிர் பிரிந்தாலும் எங்கள் உயிர் இருக்கும் வரை எம் நெஞ்சில் நினைவிருக்கும். தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படும்

**பிரிவால்துயருறும்**

**பிள்ளை, குஞ்சு**

> நீ உன்னைப் பலவீனன் என்று ஒரு போதும் சொல்லாதே எழுந்து நில் தைரியமாக இரு வலிமையுடன் இரு பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீது சுமத்திக்கொள் என் விதியை படைப்பவன் நீயே என அறிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றது.
>
> ***சுவாமி விவேகானந்தர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සහෝදරයා වන තිරුනාවුක්කරසු මහත්තයා,

අවුරුදු 30 කට ඇතුලත තිබෙන අපගේ අඳුරුම්කමේ සීමාවක් නැතුව සහෝදර නාමය හැරුණි. සතුට බෙදාගෙන ඉන්නා අතර මාව තනිකරපු දුක දරාගන්න බැරුව මා හිත තුලින් වේදනා ගෙන සිටිමි. අපේ මගේ සහෝදරයා සහ මාගේ ව්‍යාපාරය ගොඩනගා ගන්න දුන්නු අදහස් ඉතාම වැදගත් වුණා. මා කරගෙන ගිය කොප්පරා ව්‍යාපාරයේ මිල, වැඩිවීම, අඩුවීම කාලයේදී දුරකතනයෙන් මට දැනුම් දී අදහස් කියාදී ඉදිරියට යාමට උදව් වුණා. අපි අතරේ තිබුණ ගනුදෙනු සම්බන්ධතාවයේ කවදාවත් මට කිසිම අසාධාරණකමක් සිදුනොවෙන්ඩ අප අතරේ සම්බන්ධයක් තිබුණු බව මා හදවතින්ම පිළිගන්නෙමි. මා සමග මාගේ සහෝදරයාගේ දුක සැප සොයා බලපු මාගේ පවි සහෝදරයෙක් මාව දාලා දෙවියෝ ලගට ගිය මේ ගමනේ මාගේ සහෝදරයාට දෙවියන් ලඟින්ම ඉන්න ලැබෙන්න කියා මා හදවතින්ම ප්‍රාර්ථනා කරමි. මිතුර ඔබට කාලි මෑණියන්ගේම පිහිට ලැබේවා.

එල්.එච්. ජයසිංහ
(චුටි මහත්තයා)
ස්වර්ණ ජයන්ති මාවත,
ආරච්චිකට්ටුව.

නොමියෙන මිනිසා

සසර වසන්තයේදී දිගු අතීතයකදී හමුවූ මනුෂ්‍යත්වයේ දෙවියෙකු සේ වටිනා අප සැලකූ තාරුනාවුකරසු වූ ඔහු මෙලොවින් සමුගත්තවුද සැමදා අප අතරම ඉපිද සිට පවුලේ දුවා දරුවන්ට බිරිඳට හා සැමට ශක්තියක් හා ආශිර්වාදයක් වනු නොවනුමානයි. එම වටිනා මිනිසා නොමියෙන මිනිසා සේ සලකමි.

මේ ඔහුගේ ගනුදෙනුකරුවකුසේම මිතුරෙකි
ඩබ්.එම්. අනිල් විකුමසිංහ
හඳපාන්ගල
ගාටඋල්ල



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவா ! மரணத்தையிட்டு உன்னுடன் வாதிடமாட்டேன்.

மாறாக இவ் உத்தமனை எமக்கு அறிமுகப்படுத்தி நீ செய்வித்த அறப்

பணிகளுக்கு நான் நன்றி சொல்கின்றேன்

ஆனால்,உன்னை ஒன்று கேட்பேன்.

நீ நிறைவேற்ற வேண்டும் ஐயா

எம்மைப் பராமரித்துக்களைத்துவரும் இவ்

உத்தமனின் உயிரை நீ பராமரித்துக்

களைப்பகற்ற வேண்டும்

நீண்ட ஓய்வின் பின் மீண்டும் இவ்வுயிரை நீ

பிறப்பிக்க நினைத்தால் ஆன்மீகத்தின் மூலமாக

எமது சமுதாயம் உய்ய வழி சொல்லும் சுடர்

மிகு வழி காட்டியாகத் திருப்பி அனுப்பி

எமக்கருள் செய் இறைவா

அதுவரை நாம் பொறுத்திருப்போம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்களின் வாழ்க்கைக்குறிப்பு

தாய் :~ கொல்லங்கலட்டி கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகள் தெய்வானைப்பிள்ளை

தகப்பன் :~ ஞானசேகரம் தங்கமுத்து தம்பதிகளின் மகன் சுப்பிரமணியம்

பிறப்பு :~ கொல்லங்கலட்டி தெல்லிப்பளை 19.07.1947

கல்வி :~ கொல்லங்கலட்டி,சைவவித்தியாசாலை, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி

ஜீவனோபாயம் :~ வியாபாரம்

இல்லத்துணை :~ நடராசா யோகேஸ்வரி தம்பதிகளின் மகள் விக்கினேஸ்வரி

திருமணம் :~ 1985ம் ஆண்டு

மக்கட்பேறு :~ வானதி

அபிவர்ஷனி

ஆர்த்திகா

பிற்காலவாழ்க்கை :~ 1969 ~ 1989 ~ கொழும்பு(கொழும்பில் மட்டுமன்றி தனது சொந்த ஊரான ''முருகவாசம்'' கொல்லங்கலட்டியிலும் வாழ்ந்தவர்)

1990 ~ 1992 மூளாய்

1993 ~ 2011 சிலாபம்

28.02.2011 அமரத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு அண்ணையின் நினைவலைகளில்

அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது. இறைவனால் அருளப்படுகின்ற மனிதப்பிறவி மிகவும் உயர்ந்தது. ஆறறிவு பெற்று சிந்தித்துச் செயலாற்றும் திறன்கொண்ட இப்பிறவியில், இறைவன் மீது பக்தி கொண்டு ஏழைகள் துயர் நீக்கி, பிறர்துன்பங்களில் பங்கேற்று எல்லோருக்கும் நல்லவராய் வாழ்ந்து சிறப்பது மிகச் சிலரே.

அமரத்தவம் அடைந்த திருநாவுக்கரசுடன் நான் நீண்ட காலமாகப் பழகியவன். நான் கொழும்பு வரும் காலங்களில் என்னை, எங்கெங்கு கூட்டிச் செல்ல வேண்டுமோ, திறமையான உருசியான சாப்பாடு எந்தக் கடையில் இருக்குமோ அங்கெல்லாம் கூட்டிச் சென்று வாங்கித்தருவார். நான் திரு அண்ணை, திரு அண்ணையென்று அவருடன் திரிவேன். திரு அண்ணையின் தொழிலில் ஏற்படும் நஸ்ட இலாபம்,சுகதுக்கங்கள் யாவற்றிலும் அவர் என்னுடன் பகிர்ந்து கொள்வார். திரு அண்ணை இணுவிலில் தேங்காயெண்ணைஆலை நடாத்தும் போது நானும் அங்கு வேலை செய்தேன். திரு அண்ணா தனது நீரிழிவு நோயில் பாதிப்படைந்து போராடிக்கொண்டிருக்கும் போது அடைந்த துன்பம் ஏராளம், இந்த நேரத்திலும் தனது மனதைத் தளரவிடாது மிகத்தைரியத்துடன் தனது தொழிலின் உயர்ச்சிக்காகவும் குடும்ப நலனுக்காகவும் அரும்பாடுபட்டார். தனது வியாபாரத்தில் பல தாழ்வுகளைச் சந்தித்த போதும் மனம் தளரவில்லை. தன்னம்பிக்கையுடன் செயல்பட்டார். வீட்டிற்குச் சென்றால் அமோகமான உபசரிப்பும் செய்து விருந்தோம்ப வைத்தே அனுப்புவார். உண்மைக்கும் நேர்மைக்கும் பிறப்பிடம் திரு அன்னையே இவரிடம் நான் கற்றுக் கொண்ட விடயங்கள் அதிகம்.

திரு அண்ணா அமரத்துவம் அடைந்துவிட்டாலும் குடும்பத்தாரிடம் செல்லும் போது அவரது ஒவ்வொரு செயல்களும் எனது மனதில் நினைவோடிக் கொண்டிருக்கின்றது. எனக்கு வயது மூத்தவர் என்று பழகியதில் திரு அண்ணையே முதலிடத்தை வகிப்பவர். உற்ற நண்பனல்ல,உற்ற சகோதரத்துவ அண்ணனை இழந்துவிட்டேன். இனமும் திரு அண்ணா என்னுடன் இருப்பது போன்றதோர் நினைவலைகள் என்னுடன் இருக்கின்றது. இவரது உயிர்பிரிந்தாலும், எனது மனதைவிட்டு அகலமாட்டார். இவரது குடும்பத்தாருடன் எனது துயரைப்பகிர்ந்து கொண்டு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இராஜன்**

**சுன்னாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்துவக்கத் தேவரெல்லாம் விரைந்தங்கே காத்திருப்பார்

நாவுக்கரசே நாவுக்கரசே
நல்லிருந்து வைப்பதற்கு
வானத்தார் காத்திருப்பர்
சுப்பிரமணியம் நாவுக்கரசே
செல்லுமய்யா செல்லுமைய்யா
நில்லாமல் செல்லுமய்யா
செல்லுமைய்யா சொல்லாமல் செல்லுமைய்யா
செல்லும் விருந்தோம்பி
வருவிருந்து பார்த்திருந்து
பெருவிருந்து வைப்பதிலே
பெருமகிழ்வு கண்டதனால்
பக்தி இயல் பரிமளித்துச்
சித்த மலம் அறுந்தொழித்து
பழவினைகள் பாறியதால்
சிவமாகிப் போனவரே?
விருந்து வைக்கத் தேவரெல்லாம்
விரைந்தங்கே காத்திருப்பார்
விரைந்தோடிச் செல்லுமய்யா!

அறிஞர் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் எழுத்துக்களில் எங்கள் அப்பா

அன்பான வார்த்தை கொட்டி அன்புள்ளம் கொண்ட எங்கள் அப்பா

ஆர்வமும் ஆற்றலுமுள்ள அப்பா

இனிய பண்டங்கள் வாங்கித்தந்து இரப்பவர்க்கு இல்லையென்னாதுவழங்கும் அப்பா

ஈவிரக்கம் காட்டும் அப்பா

உற்றவர்க்கு என்றும் உதவிய அப்பா

ஊக்கமுடன் எமை வளர்த்தும் ஊரவர் அயலவரை நேசிக்கும் அப்பா

எளிமையாக என்றும் வாழ்ந்த அப்பா

ஏழைகட்கு என்றும் உதவிய அப்பா

ஒருவரை ஒருவர் புரிந்து வாழவும் ஒற்றுமையாக இருக்கவும்

எங்களை வாழப் பழக்கிய அப்பா

ஓம் என்றால் என்றும் மாருத அப்பா

ஔவியம் பேசாத அன்பான அப்பா

அஃறிணையாய் வாழாது உயர்திணையாய் வாழ்ந்தவர் எங்கள் அப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில் நீங்காத சித்தப்பா

எங்களின் மேல் அக்கறையும் பாசமும்,பரிவும் கொண்ட சித்தப்பா எம்மை எல்லோரையும் விட்டு விண்ணுக்கு சென்று விட்டீர்களே எங்களின் சித்தி, பிள்ளைகள்,நாம் எல்லோருக்கும் திடீர் துயரத்தினை தந்துவிட்டு இறைவன் உங்களை தன் பக்கம் எடுத்துவிட்டானோ? தன்னலம் கருதாது பிறருக்காகவே வாழ்ந்தவர் நீங்கள் சிறுவயது முதல் எமக்கு கொழும்பில் இருந்து ஆசைப்பண்டங்களை கொண்டு வந்து தருவதனாலும் உங்களுக்கு கொழும்புச்சித்தப்பா என்று பெயரையும் சூட்டிவைத்தோம். எமக்கு அப்பா என்ற ஸ்தானத்தில் இருந்து அறிவுரையும், பாசத்தையும்,சகல உதவிகளையும் செய்து வந்ததை நாம் என்றும் மறக்கமுடியாது. உங்களின் பிள்ளைகளைப் போன்றே எம்மையும் தனது பிள்ளைகளாக சிந்தித்த ஒரு தந்தை என்றால் நீங்கள் தான் சித்தப்பா. நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும் எமது வாழ்க்கையில் அக்கறை கொண்டு தனது வருத்தத்தையும் பொருட்படுத்தாது சிந்தித்த சித்தப்பா என்றால் நீங்கள் ஒருவர் மட்டுமே தொலைபேசியில் கதைக்கும் போதும் கூட அடிக்கடி சொல்வீர்கள் எனக்கு எல்லாம்சுகமாகி மீண்டும் பழைய மாதிரி வருவேன் என்று ஆனால் அந்த நம்பிக்கையோடு தான் இருந்தோம் வெகு சீக்கிரமாக ஆழ்ந்த துயரத்தை எமக்கு தருவீர்கள் என்று கொஞ்சம் கூட நினைக்கவே இல்லை.

எமக்கு சிறுவயதாக இருக்கும் போது அன்பாக உடுப்புக்களும், தின்பண்டங்களையும் வாங்கி கொண்டு வந்து தந்து அன்பான சிறிய சிரிப்புடன் எம்மையும் சிரிக்க வைப்பீர்கள். அவையெல்லாம் எம் நினைவில் இன்றும் இருக்கின்றது. எங்களின் குடும்பத்தின் மீது அதிக அதிகமாக அக்கறையும் அன்பும் கொண்ட எமது சித்தப்பா இல்லையே. தம்பி, தம்பி என்று வருத்தம் அதிகமாக இருக்கும் போது கூட எனக்கு அறிவுரைகளை கூறியதை எனக்கு என்றும் மறக்கமுடியாது. நீங்கள் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் தான் பயணம் சென்றேன். ஆனால் எனக்கும் ஏமாற்றத்தை தந்துவிட்டீர்களே சித்தப்பா.

நான் உங்களை வந்து பார்த்த போதும் என்னைக் கண்டு சந்தோச மடைந்தீர்களே. எல்லோரும் நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்று நினைத்தீர்கள் எல்லோரினதும் நல்ல காரியங்களையும் பார்த்து கண்டு கழிக்க அந்த இறைவன் விடாமல் தன் பக்கம் கொண்டு சென்றுவிட்டான். விதியை யாரால் தான் வெல்லமுடியும். ஆனால் என்றும் நீங்கள் இறைவனடி சேர்ந்தாலும் எங்கள் நினை வலைகளில் இன்றும் வாழ்ந்து கொண்டு இருப்பதாக நினைத்து பிரார்த்திப்போமாக.

**சுசி, பவா ,ஜெனனி, பகீ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு மாமா........!!!

எனது அம்மாவின் ஒன்றுவிட்ட தம்பியான இவரை திருநாவுக்கரசு மாமா என்று அன்புடன் அழைப்பேன். நான் சிறுவயதில் யாழ்ப்பாணம், கொல்லங்கலட்டியில் இருந்த பொழுது அவர் எனக்கும், எனது அம்மாவிற்கும் செய்த உதவிகளோ ஏராளம் என்னை சைக்கிளில் ஏற்றிச் செல்வது முதற்கொண்டு, வீட்டிற்கு அழைத்து அருகில் அமர்த்தி உணவளித்து தானும் என்றுடன் உணவருந்தி மகிழ்வார். திருநாவுக்கரசுமாமாவும் அவரது தாயார் பாபா பாட்டியும் என்னுடன் மிகவும் அன்பாக இருந்தார்கள். ஆனால் விதியின் விளையாட்டோ என்னவோ இவர்கள் இவரது இறுதி ஊர்வலத்திலும் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை.

திருநாவுக்கரசுமாமா எவரையாவது குறைகூறியோ அல்லது எவரேனும் அவரைப்பற்றி பிழைகூறி நான் அறியேன். எல்லோருடனும் மிகவும் அன்பாக பழகுவார். என்ன கஷ்டம் வந்த பொழுதிலும் துணிவுடன் தலைநிமிர்ந்து வாழ்ந்த ஒருவர் அவர் சிலாபத்தில் வசித்தால் நாங்கள் சென்று அவரைப்பார்த்தது மிகவும் குறைவு,ஆனால் எப்பொழுது கொழும்பு வந்தாலும் எங்கள் வீட்டிற்குவராமல் அவர் சென்றதில்லை. தன் இயலாநிலமையையும் பொருட்படுத்தாது சில நேரங்களில் வருகை தந்திருப்பார். அவர் ஒவ்வொருமுறை வரும் பொழுதும் கையில் ஏதாவது ஒரு பொருளுடையதான் வருவார்.

அவருக்க சாத்திரத்தில் மிகவும் நம்பிக்கை அதில் தனக்கு நடந்தது,நடக்க இருப்பதுயாவற்றையும் தெரிந்துகொள்ள மிகவும் ஆர்வமாக இருப்பார். அவற்றில் நிறைய விடயங்களை மனம் திறந்து எனது அம்மாவுடன் (அன்னக்கா) பகிர்ந்து கொள்வார். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட பின் அவர் அடைந்த கஷ்டங்களோ மிகவும் அதிகம். வீட்டில் தங்கியதைவிட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாட்களே அதிகம் என்றுகூட சொல்லலாம் அந்நாட்களில் எனது சித்தியிடம் (கிரிசா அக்கா) மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வார். கடைசியாக அவரை நான் சென்று சந்தித்தபொழுது தனது சிறுநீரகமாற்று சிகிச்சைபற்றி கலந்து உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது மிகவும் நம்பிக்கையுடன் இருந்தார். இதற்கு முன்னர் நோய்வாபயப்படும் பொழுது எல்லாம் தன்நம்பிக்கையை இழக்கும் அவர் அன்று தைரியத்தடன் இருந்தார். அந்த நம்பிக்கையை இறைவன் பறித்தது ஏனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தன்வாழ்க்கையில் செய்த தர்மங்களும்,நேர்மையுடன் இருந்தமையும், அவரது விடாமுயற்சியும் தான் மீண்டும் வியாபாரத்தில் அவரை உயர்நிலைக்கு கொண்டு சென்றது. அதுபோல் அவர் ஒருநல்ல மனிதராக வாழ்ந்தார். என்பதற்கு அவரது இறுதிக்கண்ணீர் அஞ்சலியில் பங்கேற்ற மக்கள் தொகையே சாட்சி கொழும்பில் நடந்த இறுதி அஞ்சலிக்காக சிலாபத்தில் இருந்து ஏராளமான மக்கள் தமது பயணதூரத்தையும் பொருட்படுத்தாது வந்திருந்தார்கள். அவர்களில் சிலர்,இவரை நாங்கள் ஒருமுறைகூட நேரில் சந்தித்தது இல்லை என்றும் வியாபாரநோக்கில் தொலைபேசியில் உரையாடியது மட்டுமே இறுதி அஞ்சலிக்காக வந்தோம் என்றார்கள். ஒரு மனிதனுக்கு இறைவிடவும் கௌரவம் வேண்டுமோ? தர்மம் தலைகாக்கும் என்பார்கள் அது திருநாவுக்கரசுமாமா வாழ்வில் முற்றிலும் உண்மை.

திருநாவுக்கரசு மாமா உங்களது திருமண நாளன்று நான்தான் பெண்தோழி ஆனால் உங்களது இறுதிநாளன்று கலந்து கொள்ள முடியவில்லையே என்ற வருத்தம் ஒரு நல்ல மனிதரை நாம் இழந்து விட்டோம்.

**உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**அன்புள்ள மருமகள்,**
**DR.ச.தேனுகா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் மதிப்புக்குரிய நண்பர் திருநாவுக்கரசு கொழும்பில் தெங்குப்பொருட்கள் வியாபாரத்தில் தனது தொழிலை ஆரம்பித்து அதில் பெரும் முன்னேற்றம் கண்டு தனது சுயமுயற்சியால் தொழிலை பன்முகப்படுத்தி தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அதில் பெரும் வெற்றி கண்டார். தென்னை உற்பத்திக்கு மையமாக கருதப்படும் சிலாபம் பகுதியில் தனது எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டார்.

அவர் தனது தொழில் முயற்சியில் பல சவால்களையும் பல எதிர்பாராத கஷ்டங்களையும் எதிர்நோக்கியும் சோர்வடையாது உழைத்தார். நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் பல நட்டங்களை எதிர்கொண்டும் மனம் தளராது இறைவனடி சேரும் வரை உழைத்துக் கொண்டே இருந்தார்.

அவர் தனது தொழிலை கண்ணியத்துடனும் நேர்மையுடனும் நடத்தி பலரின் மதிப்பை பெற்றார்.எல்லோரிடமும் இன்முகத்துடன் பழகும் அவரின் பாங்கும் விருந்தோம்பல் பண்பும் அவரைச் சுற்றி பல நண்பர்களை உருவாக்கியது.

அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

**வி. எஸ். கணேசலிங்கம்**
**சட்டத்தரணி**
32 2/3,பிரேசர் அவனியு,
தெகிவளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 12 | தேசிய இளைஞர் தினம் |
| பெப்ரவரி | 28 | தேசிய அறிவியல் தினம் |
| பெப்ரவரி | 14 | உலக காதலர் தினம் |
| மார்ச் | 8 | சர்வதேச பெண்கள் தினம் |
| மார்ச் | 11 | பொதுநலவாய தினம் |
| மார்ச் | 13 | உலக சிக்கன தினம் |
| மார்ச் | 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் | 21 | உலக வன தினம் |
| மார்ச் | 22 | உலக நன்னீர் தினம் |
| மார்ச் | 23 | உலக வளிமண்டல தினம் |
| ஏப்ரல் | 01 | உலக முட்டாள் தினம் (1564 தொடக்கம்) |
| ஏப்ரல் | 07 | சர்வதேச சுகாதார தினம் |
| ஏப்ரல் | 12 | உலக விண்வெளி தினம் (ககாரின் விண்வெளிக்கு முதன் முதல் சென்ற தினம்) |
| ஏப்ரல் | 18 | உலக மரபுரிமை தினம் |
| ஏப்ரல் | 22 | உலக புவி தினம் |
| மே | 1 | உலக தொழிலாளர் தினம் |
| மே | 3 | உலக பத்திரிகைச் சுகந்திர தினம் |
| மே | 8 | உலக செஞ்சிலுவைச் சங்க தினம் |
| மே | 9 | உலக அன்னையர் தினம் |
| மே | 15 | சர்வதேச குடும்ப தினம் |
| மே | 17 | உலக தகவல்தொடர்பு தினம் |
| மே | 18 | உலக நூதனசாலை தினம் |
| மே | 31 | உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் |
| ஜீன் | 5 | உலக சூழல்ட பாதுகாப்பு தினம் |
| ஜீன் | 7 | உலக தொல் பொருளியலாளர் தினம் |
| ஜீன் | 20 | உலக போதைப் பொருள் தடுப்பு தினம் |
| ஜீன் | 27 | உலக நீரழிவாளர் தினம் |
| ஜீலை | 5 | உலக சுற்றாடல் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஜீலை | 11 | உலக மக்கள் தொகை தினம் |
| ஜீலை | 17 | உலக வறுமை ஒழிப்பு தினம் |
| ஜீலை | 28 | உலக அகதிகள் தினம் (1951 தொடக்கம்) |
| ஆகஸ்ட் | 6 | உலக சமாதான தினம் |
| ஆகஸ்ட் | 29 | தேசிய விளையாட்டு தினம் |
| செப்டம்பர் | 8 | உலக எழுத்தறிவு தினம் |
| செப்டம்பர் | 16 | உலக ஓசோன் தினம் |
| செப்டம்பர் | 25 | உலக காதுகேளாதோர் தினம் |
| செப்டம்பர் | 27 | உலக சுற்றுலா தினம் |
| அக்டோபர் | 1 | உலக சிறுவர் தினம் |
| அக்டோபர் | 2 | உலக மதுவிலக்கு தினம் |
| அக்டோபர் | 3 | உலக குடியிருப்பு தினம் / நல்லொழுக்க தினம் |
| அக்டோபர் | 4 | உலக விலங்கு நலதினம் |
| அக்டோபர் | 5 | உலக சிறுமியர் தினம் |
| அக்டோபர் | 6 | உலக ஆசிரியர் தினம் |
| அக்டோபர் | 9 | உலக தபால் நிலைய தினம் |
| அக்டோபர் | 14 | உலக தரநிர்ணய தினம் |
| அக்டோபர் | 15 | உலக வெள்ளைப்பிரம்பு தினம் |
| அக்டோபர் | 16 | உலக உணவு தினம் |
| அக்டோபர் | 24 | ஐக்கிய நாடுகள் தினம் |
| அக்டோபர் | 30 | சர்வதேச சேமிப்பு தினம் |
| நவம்பர் | 14 | குழந்தைகள் தினம் |
| டிசம்பர் | 1 | உலக எய்ட்ஸ் தினம் |
| டிசம்பர் | 3 | வலது குறைந்தோர் தினம் |
| டிசம்பர் | 10 | மனித உரிமை தினம் |
| டிசம்பர் | 23 | விவசாயிகள் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்



ஆறோடி வளம் கொழிவரும் மண்ணில்
வேரோடி விழுதுவிட்ட ஆலும்
படைசூழ கொடி கொண்ட மன்னரும்
விடைபெறுவாரோடி நாளிவ்வுலகைவிட்டு

அமரர் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவத்கீதை சொல்லும் வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால்
அதனை சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு
அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கடமை
அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்
அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு
அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம்
அதனைப்புகழுடன் முடித்துவிடுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு
அதனை ஆராதியுங்கள்
வாழ்க்கை ஒரு துயரம்
அதனைத் தாங்கிக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம்
அதனை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம்
அதனை விடை காணுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நன்றி மறப்பது நன்றன்று

எமது குடும்ப ஒளிவிளக்காய் விளங்கிய எமது அன்புத் தந்தை அமரர் திருநாவுக்கரசு அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு எமக்குத் தக்க நேரத்தில் எங்கள் இடம் தேடிவந்து ஆறுதல் செய்தி கூறியவர்களுக்கும், மரண கிரியைகளிலும்,கடைசி நேரம்வரையும் இறுதி யாத்திரையில் பங்கேற்றவர்களுக்கும் மற்றும் உள்நாட்டிலும் எட்டாத்தூரத்திலும் இருந்தும் தொலைபேசி மூலமாகவும் தந்தி மூலமாகவும் அனுதாபமடல்கள் மூலமாகவும் துக்கத்தில் பங்கேற்றும், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள் மூலம் தமது அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு வகையில் வைத்தியசாலையில் உதவியவர்களுக்கும், உத்தியோகத்தர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அந்தியேட்டிக் கிரிஜைகளில் பங்குபற்றிய எல்லோர்க்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி

மைக்குளம்
சிலாபம்

**இங்ஙனம்**
**மனைவி, மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சவி


**தண்டிகைகை முதலி**

ஞானசேகரம் + தங்கமுத்து

- ஆறுமுகம் + மங்கையர்கரசி
  - சிவகாமசுந்தரி + நடராஜா
  - ஞானசேகரம் + கலாவதி
  - அன்னலட்சுமி + ஈஸ்வரச்சந்திரன்
  - கணேசலிங்கம் + யோகேஸ்வரி
  - கிரிசாம்பாள் + துரையப்பா
  - சண்முகலிங்கம் + லக்சுமி
  - ஸ்ரீந்
- சுப்பிரமணியம்
- வைத்திலிங்கம் + தங்கமுத்து
  - சிவபாலன் + ஞானேஸ்வரி
  - தருமபாலச்சந்திரன் + இராஜேஸ்வரி
  - ஜெயபா + கலைவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed by : Vaani - Vavuniya. Tel : 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org